**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in


பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **06.06.2023**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் ஆகியவற்றில் வழங்கப்படும் இளமறிவியல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகளுக்கான பொதுவான செய்திக்குறிப்பு

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் இளமறிவியல் பட்டப்படிப்புகள்:**

2023-2024 ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் ஆகிய பல்கலைக்கழங்களால் வழங்கப்படும் இளமறிவியல் பட்டப்படிப்பில் சேர விரும்புவோருக்கு பொதுவான இணையதள விண்ணப்பம் அறிவிக்கப்பட்டு 10.05.2023 முதல் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன . தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14 இளமறிவியல் பட்டப்படிப்புகளுக்கும், 3 பட்டயப்படிப்புகளுக்கும் சேர்க்கை நடைபெறும். தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகத்தில் 6 இளநிலை தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்கும் மற்றும் 3 தொழில்கல்வி பட்டப்படிப்புகளுக்கும் இவ்விண்ணப்பம் வழியாக சேர்க்கை நடைபெறும். இதுவரை 34,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மாணவர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி தேதி 09.06.2023 ஆகும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டயப்படிப்புகள்:**

இந்த கல்வியாண்டில் வேளாண்மை (ஆங்கிலவழி), வேளாண்மை (தமிழ்வழி) தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் ஆகிய பட்டயப்படிப்புகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி தேதி 09.06.2023 ஆகும். விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் . விண்ணப்பதாரர்கள் www.tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 0422-6611345, 0422-6611346, 9488635077, 9486425076 என்ற தொலைபேசி உதவிச் சேவை எண்களிலும் ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் வார நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அறிந்து கொள்ளலாம்.

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகம்,, நாகப்பட்டினம்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 04365 – 256430, 9442601908 என்ற தொலைபேசி உதவிச் சேவை எண்களிலும் ugadmission@tnjfu.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் வார நாட்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 6 மணி வரை அறிந்து கொள்ளலாம்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*